ஆய்வுச்சுடர்: பன்னாட்டு பன்முகத்தமிழ் மின்-ஆய்விதழ் ISSN NO.2581-5938
ANJAC, SIVAKASI, TAMILNADU, INDIA மலர்-2, இதழ்-2, சூன் 2019

# சிறுவர்களுக்கான விழுமியப் பண்புகளை வளர்ப்பதில் ஈழத்துச் சிறுவர் கதைகளின் பங்களிப்பு

**வானதி பகீரதன்**

சிரேஸ்ட விரிவுரையாளர், சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

---

ஈழத்தில் சிறுவர் கதை வளர்ச்சிபற்றிச் சிந்திக்கும்போது நாவலரது பாலபாடங்களை முதன் முயற்சியாகக் கொள்ளலாம் போன்று தோன்றுகின்றது. பாலபாடங்களில் வரும் தாய் செய்த நன்றி, புத்தியுள்ள தீர்ப்பு, பேராசை பெருந்துயர், செய்ந்நன்றி கொன்றவர் கெடுவர் முதலான இருபத்தொரு கதைகள் இடம் பெறுகின்றன. இவை சிறுவர்களுக்கு நல்லவிழுமியக்; கருத்துக்களை வெளிப்படுத்தும் நோக்கில் படைக்கப்பட்டவை.

இவற்றைத் தவிர குமாரசாமிப் புலவரின் கீதோபதேசம், சிசுபாலசரிதம், அழகுசுந்தர தேசிகர் இலகு நடையில் எழுதிய பாண்டவர் கதை, இராமன் கதை போன்றனவும் வடஇலங்கை தமிழ் நூற்பதிப்பகம் சிறுவர்களின் மொழியறிவு விருத்தியை நோக்கமாகக் கொண்டு வெளியிட்ட இராஜாதேசிங்கு, தமயந்தி, சாவித்திரி, குசேலர் சரித்திரம் முதலான கதை நூல்களும் வெளிவந்தன. இத்தகைய புராண இதிகாச, உபநிடதக்கதைகளின் வரவினால் சிறுவர்கதை எழுதும் கதாசிரியர்கள் குறைந்தளவே காணப்பட்டனர்.

சிறுவர்கதைகள், சிறுவர்களின் உள்ளத்திற்கும் வயதிற்கும் பொருத்தமான கதைக் கருத்துக்களைக் கொண்டு அமைந்திருத்தல் வேண்டும். சிறுவர்களின் மனதில் நல்லெண்ணங்களை, அறிவை வளர்ப்பவையாக அவை அமையவேண்டுமே தவிர அவர்களது மனதில் தீயபழக்கவழக்கங்கள், தீயஎண்ணங்களை வளர்ப்பவையாக அவை அமையக்கூடாது.

சிறுவர்களின் அறிவாற்றல், கற்பனைத்திறன், மனோவிருத்தி, உற்சாகம், நல்லுணர்ச்சி போன்றவற்றை அவர்களிடையே ஏற்படுத்தும் வகையில் கதைகள் அமையவேண்டும். பாடசாலை, குடும்பம், சமூகச் சூழலுக்கேற்பத் தன்னை இயைபாக்கிக் கொள்ளும் திறனை சிறுவர் கதைகள் ஏற்படுத்த வேண்டும். எனவே அதற்குப் பொருத்தமானதாகச் சிறுவர் கதைகளின் கதைக்கரு அமைதல் அவசியம். கதைகளில் இடம் பெறும் பாத்திரங்கள் சிறுவர்களால் நன்கு அறியப்பட்டவர்களாக அவர்கள் விரும்பும், பறவைகள், விலங்குகள், முதலானவற்றைக் கொண்டனவாகவும் உயிரோட்டம் உடையனவாகவும் அமையவேண்டும்.

சிறுவர் கதைகளில் நேரடியாக அறப்போதனை, பிரசாரத்தன்மை இடம்பெறக்கூடாது. நேரடியான அறப்போதனை சிறுவர் உளவியலுக்குப் பொருத்தமற்றது. வெவ்வேறான உத்திமுறைகள் மூலம் அவை எடுத்துக் காட்டப்படுதல் பொருத்தமானது. சிறுவர் கதைகளின்; வெளிப்பாட்டுமுறை சிறுவர்களிடம் கதை படிக்கும் ஆவலை ஏற்படுத்தும் வகையில் அமைய வேண்டும். இத்தகைய பண்புகளைக் கொண்டதாக சிறுவர் உளவியலுக்கு ஏற்புடையதாகச் சிறுவர் கதைகள் பலவும் வெளிவந்துள்ளன.

ஈழத்தில் வெளிவந்த இத்தகைய சிறுவர் கதைகளின் உள்ளடக்கத்தை அடிப்படையாக வைத்து அவற்றை புராண, இதிகாசக் கதைகள், உபநிடதக் கதைகள், வாழ்க்கை வரலாற்றுக்கதைகள், செவிவழிக் கதைகள், குறள் வழிக்கதைகள், நீதிக் கருத்துக்களைக் கூறும் கதைகள், புதிய கற்பனைக் கதைகள், ஈசாப்பகதைகள் நகைச்சுவைக் கதைகள், துப்பறியும் மர்மக் கதைகள், பாடசாலை, குடும்ப, சமூக, சமகாலச் சூழலை வெளிப்படுத்தும் கதைகள் எனப் பலவகைப்படுத்தி நோக்க முடியும். இக்கதைகள் எவ்வாறு சிறுவர்களுக்கான விழுமியப் பண்புகளை வெளிப்படுத்துகின்றன என்பது நோக்கத்தக்கது.

புராண இதிகாச, உபநிடதக்கதைகளில் கதை மாந்;தர்களின் பண்புகள் அவர்களது பாத்திர அறிமுகம் என்பன நேரடியாகவே கூறப்படுவதுடன் கதைக்கருத்துக்கள் மிகவும் எளிமையாக அமைகின்றன. இராமாயணம், மகாபாரதம், புராணங்கள் போன்றவற்றில் இடம்பெறும் பாத்திரங்கள்

ISSN NO.2581-5938
மலர்-2, இதழ்-2, சூன் 2019

பற்றியதாகவோ அவற்றில் வரும் உபகதைகள், கிளைக்கதைகள், பற்றியதாகவோ வரும் கதைகள் இப்பிரிவினுள் அடக்கப்படுகின்றன. அஸ்டலக்ஸ்மி பதிப்பகம், ஸ்ரீ சுப்பிரமணியம் வெளியீட்டாளர். த. துரைசிங்கம், சக்திவேல், ஆறுமுகம் கந்தையா முதலியோரின் வெளியீடுகள் பெரும்பாலும் புராண இதிகாசக் கதைகளை மையமாகக் கொண்ட சிறுவர் கதைத் தொகுதிகளாகவும் வரிசை வெளியீடுகளாகவும் வெளிவந்துள்ளன. இவை துணைப்பாடநூல் என்ற அடிப்படையில் மாணவரிடையே சமய, விழுமியக் கருத்துக்களை ஏற்படுத்தும் வகையில் வெளியீடுகளாக வந்துள்ளன. ஏகலைவன், கர்ணன், கடோற்கஜன், கும்பகர்ணன், சுக்கிரீவன், அபிமன்யு, வீமன், அருச்சுனன் போன்ற நேர்நிலைப் பாத்திரங்களை மையமாகக் கொண்ட கதைகளாக அவை பெரும்பாலும் அமைந்துள்ளன.

எதிர்நிலைப் பாத்திரங்களான மந்தரை, சகுனி, துச்சாதனன் போன்றோரின் கதைகள் சிறுவர்களிடையே இத்தகைய பாத்திரங்களின் பண்புகள் வளரக்கூடாது என்பதை வலியுறுத்தும் நோக்குடன் படைக்கப்பட்டுள்ளன. மகாபாரதம், இராமாயணம், புராணக்கதையை சுருக்கமாக சிறுவர்களுக்குரிய நடையில் சிறுசிறுகதைகளாக்கி வெளியிட்டிருப்பதையும் காணலாம். மாஸ்டர் சிவலிங்கத்தின் இராமாயணக் கதை, அரிச்சந்திரன் கதை என்பவை இதற்கு எடுத்துக் காட்டுக்களாகும்.

அறிஞர், சமயப் பெரியார், மன்னர்கள், சுதந்திரப் போராட்டவீரர்கள் போன்றோரின் வாழ்க்கை வரலாறுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட அதாவது வீரபாண்டியகட்டபொம்மன், மகாத்மாகாந்தி, விவேகானந்தர், எல்லாளன், இராஜாதேசிங்கு, ராந்திதேவ் முதலானோரது சிறுவயதுச் சம்பவங்கள், நிகழ்வுகளை மையமாகக் கொண்ட கதைகள் பலவும் சிறுவர் கதைத் தொகுப்புக்களாக வெளிவந்துள்ளன. இரா. சந்திரசேகரம், இளம்பிறை ரஹ்மான் போன்றோர் விஞ்ஞானிகளின் வாழ்க்கை வரலாற்றை கதையாக எழுதியுள்ளனர். இவற்றைத்தவிர வரலாற்றுச் சம்பவங்கள் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டும் கதைகள் தோற்றம் பெற்றுள்ளன. இவையும் துணைப் பாடநூல்கள் என்ற அடிப்படையிலேயே சிறுவர்களுக்காக வெளியிடப்பட்டவை எனலாம். இவை மாணவர்களுக்கு நல்லொழுக்கங்களைப் போதிப்பவையாக அமைகின்றன.

சிறுவர் கதைகளில் பெரும்பாலானவை நீதிக் கருத்துக்களை மையமாகக் கொண்டு படைக்கப்பட்டவையாக அமைந்திருப்பதைக் காணலாம். சிறுவர்களிடையே நற்பண்புகள், விழுமியங்கள் முதலானவற்றைக் கதைவடிவில் கூறினால் அவை அவர்களது மனதைவிட்டு அகலாது என்பதால் இவை கதைகளில் அதிகளவில் இடம்பெறுவதைக் காணலாம். குறள்வழிக் கதைகள், நீதிக்கதைகள், ஈசாப்கதைகள் முதலிய கதைகளில் சிறுவர்களுக்கு அறக்கருத்துக்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. நீதிக் கருத்துக்களில் ஒழுக்கம், ஆபத்தில் உதவிபுரிதல், அகம்பாவம் இன்மை, உண்மை பேசுதல், இறைபக்தி, பிறரை மதித்தல், பெற்றோரைமதித்தல், தாயன்பு, கடவுள்பக்தி, நன்றிமறவாமை, தகாதநட்பு தீங்குதரும், ஒற்றுமை, தீயசெயல்கள் செய்யாமை, பேராசையின்மை முதலான பலவும் அடங்குகின்றன.

ஆபத்தில் உதவுதல் வேண்டும் என்பதை திமிலைத் துமிலனின் ஈசலும் புற்றும், மகேஸின் ஆலமரத்தின் பெருமை முதலானவை உணர்த்துகின்றன. உண்மையின் உயர்வை வெளிப்படுத்தும் வகையில் நவமோகனின் விறகுவெட்டி கதையும் மாஸ்டர் சிவலிங்கத்தின் அரிச்சந்திரன் கதையும் அமைகின்றன. பிறருக்கு உதவி புரிய வேண்டும் என்பதை திமிலைத் துமிலனின் அணில்வால் கதை உணர்த்துகிறது. ஒற்றுமை உயர்வுதரும் என்பதை நவமோகனின் ஒற்றமையே பலம், போட்டியின் முடிவு முதலானவையும் மொஹிடின் ரஜாவின் நீலமும் பச்சையும் முதலானவையும் உணர்த்துகின்றன. பிறருக்குத் தீங்குசெய்யக் கூடாது என்பதை நவமோகனின் தவறை உணர்ந்த யானை, தன்வினை தன்னைச் சுடும் போன்றனவும் புளோரன்ஸ் ஞானதீபம் ஜேசனின் நரியின் தந்திரம், நாய்க் குட்டியும் முயற் குட்டியும் போன்ற கதைககளும் உணர்த்துகின்றன. பிறரை மதிக்க வேண்டும் என்பதை இவரது குதிரைச்சவாரி, காகத்தின் குரல் முதலான கதைகள் தெளிவுபடுத்துகின்றன. பெற்றோரை மதிக்க வேண்டும் என்ற நீதியை புளோரன்ஸ் ஞானதீபம் ஜேசனின் குட்டிக் குரங்கு என்ற கதையும் மொஹிடின் ரஜாவின் ஆட்டுக்குட்டி சீதா என்ற கதையும் உணர்த்துகின்றன.

தேனுகாசுதா ராஜின் பேசும் பொம்மைகள் சிறுவர்களிடையே உண்மை பேசுதல், தீயசெயல்களைச் செய்யாமை முதலிய நீதிக் கருத்துக்களை எடுத்துக் கூறுகின்றன.

“மனிதர்களில் பலர் தீயசெயல்களைச் செய்கிறார்கள், மற்றவர்களுக்குத் துன்பம் கொடுக்கிறார்கள் அவர்களைப் பார்க்க எங்களுக்குப் பிடிக்காது…” (பேசும் பொம்மைகள், பக்**கம்** 17)
இதன்மூலம் சிறுவர்களிடையே உண்மைபேசுதல், தீயசெயல்களைச் செய்யாமை முதலிய விழுமியக் கருத்துக்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன.

ஓ. கே. குணநாதனின் அம்மா என்ற சிறுவர் கதை தாயன்பை வெளிப்படுத்த முனைகின்றது. குயிலின் முட்டையை அடைகாத்து குஞ்சு வந்ததும் அதற்கு உணவூட்டி வளர்ப்பது காகமே. தவறுதலாக கூட்டிலிருந்து குயில்குஞ்சு விழுந்தபோது அதனைத் தடவிக் கொடுத்து ஆறுதல் கூறி கண்ணீரைத் துடைக்கிறது. பின்னர் உணவுதேடிப் பறந்து போகின்றது. அதைக் கண்ட குயில் தனது குஞ்சிடம் நான்தான் உன் அம்மா எனக்கூறுகிறது. குஞ்சு அதனை மறுத்து காகம் தான் தன் அம்மா எனக் கூறுகிறது. குயில் உண்மையை விளக்கியதும் குழப்படைந்த குஞ்சு சில கேள்விகளைக் கேட்ட பின்னர் தனக்கு உணவூட்டினால் குயிலை அம்மாவாக ஏற்பதாகக் கூறுகிறது. குயில் தனக்கு கூடுகட்டவோ, அடைகாக்கவோ, உணவூட்டவோ தெரியாது எனக் கூறுகிறது. பெற்றபிள்ளைக்கு உணவு ஊட்டத்தெரியாதவர் ஒருபோதும் தாயாக இருக்கமுடியாதே நீ எனது அம்மாஅல்ல. காகந்தான் எனது அம்மா எனக் குஞ்சு கூறுகிறது. பின்னர் காகத்தின் மூலம் உண்மையை அறிகிறது. இக்கதையில் காகம் கூறுவது இவ்விடத்தில் நோக்கத்தக்கது.

“இந்தஉலகத்தில இருக்கிற ஒவ்வொரு குழந்தைக்கும் அம்மா இருக்கவேண்டும் அல்லது அம்மாவாக யாராவது அன்பு காட்டவேண்டும். எந்த ஒரு குழந்தையும் அனா**தை**யாக இருக்கக் கூடாது. நான் இல்லாவிட்டால் நீயும் அனாதையாக இருந்திருப்பாய் இல்லையா…! இப்போது சொல்லு நானும் உன் அம்மாதானே!” (குணநாதன். ஓ.கே, **அம்மா**, பக்**கம்** 11) இக்கதைமூலம் வளர்ப்புத் தாயின் பாசம் உயர்வாகக் காட்டப்படுகிறது. சிறுவர்களைப் பெற்றால் மட்டும் போதாது அன்பு காட்டி அரவணைத்து வளர்ப்பவளே சிறந்த தாய் என்ற நீதிக்கருத்து எடுத்துக் காட்டப்படுகின்றது.

ச.அருளானந்தத்தின் பூஞ்சிட்டுக்கள், வண்ணத்துப் பூச்சி, அந்த அணில் குஞ்சுகள் போன்ற கதைகளில் உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் என்ற நீதிக்கருத்தும் சூரியனும் சிறுவர்களும், காகமும் செயலும், ஒற்றுமை, ஆகிய கதைகளில் அனைவரும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்ற நீதிக்கருத்தும் நன்றி உணர்வு என்ற கதையில் நன்றி மறக்காது இருக்கவேண்டும் என்பதும் நிமோசிகாவின் துணிச்சல், தம்பியும் சைக்கிளும், போன்றகதைகளில் முயற்சி திருவினையாக்கும் என்ற விழுமியக் கருத்தும் எடுத்துக்காட்டப்படுகின்றது.

பூஞ்சிட்டுக்கள் என்ற கதையில் உயிர்களிடத்தில் அன்புவேண்டும் என்ற நீதிக்கருத்து பின்வருமாறு எடுத்துக்காட்டப்படுகின்றது. “தாய்க்குருவி சிறகை விரித்து பறந்துகாட்டியது. குஞ்சுகளும் சிறகுகளை விரித்துப் பறந்து திரிந்தன. வாவ் குஞ்சுகள் பறப்பதைப் பாருங்கள் என்று நிமோசிகா துள்ளிக் குதித்தாள் பறந்த குஞ்சொன்று ரதீபனின் மடியில் தவறி விழுந்தது. குஞ்சைத் தூக்கித் தடவி முத்தம் கொடுத்தான்……குஞ்சைக் கூட்டில் வைத்துவிட்டு சின்னப் பையா குழப்படி பண்ணாமல் கூட்டுக்குள் போ என்றான். குஞ்சு கூட்டுக்குள் போனது. **பெ**ரிய குருவிகள் முதலில் பதறின பின் அமைதியாக இருந்தன. உயிர்களிடத்தில் அன்புவேண்டும் என்று ரதிபனின் வாய் முணுமுத்தது……” (பூஞ்சிட்டுக்கள், **ச. அருளானந்தம்**, பக்கமிடப்படவில்லை)

ஈசாப் கதையைத் தழுவிய கதைகளில் உண்மையின் உயர்வைக் காட்டும் விறகுவெட்டியும் கோடரியும் என்ற கதை ஒற்றுமையே பலம் தரும் என்ற கதை, ஆபத்தில் உதவவேண்டும் என்பதை உணர்த்தும் புலியிடம் சிக்கிய இரு நண்பர்கள் போன்ற கதைகள் குறிப்பிடத்தக்கன. சிறுவர்களுக்கான கதைகளில் புதிய கற்பனைக் கதைகளில் பாடசாலை, குடும்பம், சமூகச் சூழலை மையமாகக் கொண்ட கதைகள் வெளிவந்துள்ளன. பூ.க.இராசரத்தினத்தின் ‘பண்புதந்தபரிசு’ என்ற கதைத் தொகுப்பில் இடம்பெறும் பண்பு தந்த பரிசு, விளையும் பயிர், இரு மாணவர்களின் சாதுரியம், சமயோசிதபுத்தி, தெய்வம் யார், முதலான கதைகள் பாடசாலை, குடும்பச் சூழநிலை மையமாகக் கொண்டவை. ஒலுவில் அமுதனின் கூடில்லாக் குருவிகள் தொகுப்பில் இடம்பெறும் நட்பின் இலக்கணம் என்ற கதை பாடசாலை சூழலை மையமாகக் கொண்டு எழுதப்பட்டது. ஓ. கே. குணநாதனின் சங்கருக்குப் பிறந்தநாள் என்ற கதை பாடசாலை குடும்ப, சமூகச் சூழலை பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது.

சங்கருக்குப் பிறந்தநாள் என்ற கதையில் பணக்காரச் சிறுவனானசங்கர் தனது பிறந்தநாளுக்குப் பரிசாக தந்தையிடம் கேட்டு வாங்கியது ஒரு செயற்கைக் காலாகும். இதை ஒரு காலை இழந்திருந்த தன் நண்பன் ரவிக்காக வாங்குகிறான். இக்கதை மூலம் ஈழத்தின் சமகாலயுத்த சூழலினால் கால்களை இழந்த சிறுவர்களின் நிலை எடுத்துக்காட்டப்படுவதோடு அத்தகைய சிறுவர்களுக்கு உதவிகளை புரியவேண்டும் என்பதும் சிறுவர்களுக்கு உணர்த்தப்படுகின்றது.

தங்கமாம்பழம் என்ற தொகுப்பில் இடம் பெற்ற கதைகளில் அதிகமானவை ஒற்றுமையை வலியுறுத்துவனவாக அமைகின்றன. யானைக்குட்டி என்ற கதையில் காட்டில் பலமிருகங்கள் ஒற்றுமையாக வாழ்கின்றன. ஒருநாள் குட்டிகள் விளையாடும் போது யானைக்குட்டி குழியில் விழுகிறது இதனை அறிந்த மிருகங்கள் ஒன்றுசேர்ந்து அதனைக் காப்பாற்றுகின்றன. காகமும் செயலும் என்ற கதையிலும் ஒற்றுமை, கூட்டுறவுவாழ்க்கை, புத்திசாலித்தனம் என்பவையே வெளிப்படுத்தப்படுகின்றன.

'கரடியும் குட்டிகளும்' என்ற கதையில் ஒரு காட்டில் கரடி தன் குட்டியோடு வாழ்கிறது. வறட்சி காரணமாக உணவு, நீர் கிடைக்காமல் அவை துன்பப்பட்டன. தாய்க்கரடி குட்டிகளுக்கு உணவுதேடிப் பாலைவனமான மணற்பரப்பைக் கடந்து செல்கிறது. வெயிலில் நடக்கமுடியாது துன்பப்படுகிறது. கானல் நீரைக் கண்டு ஏமாற்றமடைகிறது. பின்னர் தூரத்தில் உள்ளகாட்டை அடைகிறது. அக்காட்டில் வாழும் மிருகங்கள் அதற்கு உதவிசெய்து உணவு, நீர் போன்றவற்றைக் கொடுத்து தமது இருப்பிடத்திற்கு அழைக்கின்றன. தாய்க்கரடி பிறந்த மண்ணைவிட்டு வரமுடியாது என்கிறது. இக்கதையில் பிரதேசஉணர்வு வெளிப்படுத்தப்படுகின்றது.

பொம்மைகள் என்ற கதை சிறுவர்களுக்கு நன்கு விருப்பமான பொம்மைகள் பற்றியதாகும். இப் பொம்மைகள் சிந்து என்ற சிறுமியுடன் பேசுகின்றன. பாடசாலையில் இதை அவள் கூறியபோது ஒருவரும் ஏற்கவில்லை. அப்போது அப்பொம்மைகள் பேசவும் இல்லை. அவள் வேதனைப்பட்டு அழுகிறாள். தேவதை ஒன்றுவந்து அக்குரங்குப் பொம்மைக் குட்டிகளுக்குப் பேசும் சக்தியைக் கொடுக்கின்றது. சிந்து பாடசாலையில் தனது நண்பர்களுடன் தேவதையை வேண்டி அழைக்கிறாள். அவ்வேண்டுதலில் "தீயவற்றைக் கேட்கமாட்டோம், தீயவற்றைப் பேசமாட்டோம்" (பேசும் பொம்மைகள், பக்கம் 20) எனக் கூறுகின்றனர். தேவதை வந்து பொம்மைகளைப் பேசவைக்கிறது. பிள்ளைகள் அனைவரும் அவற்றுடன் விளையாடி மகிழ்வதாகக் கதை அமைகின்றது. ஆசிரியர் இக்கதையில் சம்பவங்கள், உரையாடல்களினூடாக நல்ல விழுமியப் பண்புகளைசிறுவர்கள் விளங்கிக் கொள்ளத்தக்க வகையில் அமைத்திருக்கிறார். இதுநேரடியான அறப்போதனையாக அமையாது சிறுவர் உளவியலுக்கு ஏற்புடையதாக அமைந்துள்ளமை சிறப்பிற்குரியது.

**உசாத்துணை நூல்கள்**

01. அருளானந்தம். ச. - பூஞ்சிட்டுக்கள், அருள்வெளியீடு, திருகோணமலை, 1997.
02. அருளானந்தம்.ச. - தங்கமாம்பழம், அருள்வெளியீடு,திருகோணமலை, 2002.
03. அருளானந்தம். ச. - சின்னதேவதைகள், அருள்வெளியீடு, திருகோணமலை, 2006ல்.
04. ஆறுமுகநாவலர் - பாலபாடம், வசந்தா பதிப்பகம், சென்னை, 2003.
05. ஆறுமுகம் கந்தையா (தொகுப்பாசிரியர்) -தெனாலிராமன்கதைகள், அஷ்டலக்ஸ்மி பதிப்பகம், கொழும்பு.
06. ஆறுமுகம் கந்தையா- சிறுவர் கதைமலர் தொகுதி 1 - 7 அஸ்டலக்ஸ்மி பதிப்பகம், கொழும்பு.
07. இராசரத்தினம்.பூ.க. - பண்பு தந்த பரிசு, பி.கேஆர். பப்பிளிகேசன்ஸ் 2006. கொழும்பு.
08. ஒலுவில் அமுதன் - கூடில்லாக்குருவிகள், ரக்சானா வெளியீட்டகம், அக்கரைப்பற்று, 2002.
09. குணநாதன். ஓ. கே - குயில் அம்மா, எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், மட்டக்களப்பு, 2005.
10. பாலகிருஷ்ணன். எம்.- மாஞ்சோலைக் காட்டில் நடமாடிய தீச்சுவாலைகள், புக்ஸ்பிரிசாண்மி.
11. புளோரன்ஸ் ஞானதீபம் ஜேசன் -பாலருக்கேற்ற பத்துக்கதைகள், ஜே. பி. ஜேசன், கெங்கல்ல, 2000.
12. மாசில் பிரான்சிஸ் - சிறுவர் கதைமலர் இதழ் ஐ, மாசில் பதிப்பகம், யாழ்ப்பாணம்.
13. மாஸ்டர் சிவலிங்கம் - அரிச்சந்திரன் கதை, கிருஷ்ணா புக் சென்டர், மட்டக்களப்பு, 2004.

ISSN NO.2581-5938
மலர்-2, இதழ்-2, சூன் 2019

# REARING THE VALUES OF CHILDREN IN ACCORDANCE WITH THE CONTRIBUTION OF REFUGEE SRILANKAN CHILDREN STORIES

**Vanathi pahirathan**

While thinking about the progress of the refugee Srilankan children stories, Navalar's Baalapadam is taken as a maiden attempt. The mother character comes in those Baalapadam narrates the stories hoarded with the virtues like gratitude, wise judgement, the agony of being ambitious, ungratefulness and its ill consequences, other twenty one stories too. These stories are created with the purpose of showing and inculcating good virtuous motions into children.